REGD. No. M. 6311 PHONE No. 55650

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 267

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.M.K.

சென்னை: சித்திரை 11உ வெள்ளி (23—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 12உ சனி (24—4—54)

விடுபட்ட புதுவைப் பகுதிகள் விம்மல்

மக்கள் முடிவை யூனியன் ஏற்க மறுப்பதால் மனச்சோர்வு

மீண்டும் பிரெஞ்சு ஆதிக்கம் திணிக்கப்படுமென அச்சம்

பண்டிதருக்கு குபேர் குழு முறையீடு

"பிரெஞ்சு திட்டுகள் இந்தியாவுடன் சேர்வது குறித்து பிரான்சுடன் பேச்சுவார்த்தை நடத்த யூனியன் சர்க்கார் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம். ஏற்கனவே விடுவிக்கப்பட்ட நெட்டப்பாக்கம், பாகூர், மண்ணாடிப்பேட்டை ஆகிய மூன்று கொம்யூன்களிலும் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தைத் திணிக்க பிரெஞ்சு சர்க்கார் முயற்சியில் யூனியன் சர்க்கார் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

"அந்த மூன்று கொம்யூன்களிலும் உள்ள 40,000 மக்களும் இந்திய யூனியனுக்கு விஸ்வாசம் தெரிவித்து வாக்குறுதி எடுத்துக்கொண்டுள்ளனர். மறுபடியும் பழைய நிலை ஏற்படுவதை அவர்கள் சகித்துக்கொள்ள மாட்டார்கள்.

"இந்திய யூனியனிடம் விஸ்வாசமாக இருக்க வாக்குறுதி செய்துகொண்டதை மீறி நடப்பதைவிட, மரணத்தையே அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவர். இந்த உண்மையை இத்தருணத்தில் தங்களுடைய தனித்தப் பார்வைக்குக் கொண்டுவருவது எங்கள் கடமை எனக் கருதுகிறோம்."

இந்த வேண்டுகோளை பிரெஞ்சிந்திய விடுதலை இயக்கத்தை முதல்முதலாகத் அமைத்த சோஷலிஸ்ட் கட்சி முக்கியஸ்தர்களான எதுவார் குபேர், முத்துப் பிள்ளை, முத்துகுமாரப்ப ரெட்டியாரும் கூட்டாக பிரதமர் நேருவுக்குத் தந்திமூலம் அறிவித்துள்ளனர்.

ஒரு கோடி ரூபாய் திட்டம்

இங்கல்ல! மத்திய பாரத்தில்!!

மத்திய பாரத்தின், சாம்பால் ஆற்றில் ஒரு தேக்கம் அமைக்கத் திட்டம் தயாராகி, ராஜ்ய சர்க்கார் பணம் திரட்ட முனைந்திருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கு ரூ. 1 கோடி செலவாம்.

புதிய கல்வி திட்டம்-மக்கள் மனம்போல் முடிவுறும்!

— (:) —

ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஏப். 22—

"புதிய கல்வித் திட்டப் பிரச்னை முழுதும் சர்க்கார் ஆலோசனையில் இருப்பதால், தனித்து அமைச்சர் என்ற முறையில் நான் ஒன்றும் கருத்தறிவிப்பதற்கு இயலாது. ஆனால், அதுபற்றி எடுக்கப்படும் முடிவு, மக்கள் எதிர்பார்ப்பதுபோல் இருக்குமென நான் நம்புகிறேன்,"

—என்று, கோடம்பாக்கத்தை அடுத்த புலியூரில் நகரசபை உயர்நிலைப் பள்ளி பெற்றோர்கள் தின விழாவில் மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்குகையில் மந்திரி எஸ். எஸ். இராமசாமி படையாச்சி கூறினார்.

'இந்தியை போதனா மொழியாக்கினால் ஒற்றுமை உருக்குலையும்'

தாய் மொழிக்கு இடம் தர 16 பேர் ஆதரவு; இந்திக்கு ஒருவரே ஆதரவு!

அகமதாபாத் ஏப். 22—

'கல்லூரி சட்டத்தில் இந்தியை போதனா மொழியாக ஆக்கினால், இந்திய ஒற்றுமை ஒழிந்துபோகும்,' என 'அரிஜன்' வார இதழ்களின் ஆசிரியராக உள்ள மகன்பாய் பி. தேசாய் கருத்தறிவித்தார்.

வட்டார மொழிகளை கல்லூரி நிலையில் போதனா மொழியாக அமைத்தால், இந்திய ஒற்றுமை கெட்டுவிடாதா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் கூறும் பொழுது மகன்பாய் கூறியதாவது:—

"நான் வேறு வழியாக நினைக்கிறேன். இந்தி போதனா மொழியாக ஆக்கப்படுமானால், தேசிய ஒற்றுமைக்கு அது ஆபத்தாக முடியக்கூடும்."

கல்லூரி நிலையில் வட்டார மொழிகளை போதனா மொழியாக ஆக்குவதின்மூலமே, தேச ஒற்றுமைக்கு வழிகாண முடியுமென்றும், அவ்வாறு அமைப்பால் உண்டாகும் பலனும் இதுவென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

போதனா மொழி விவாதத்தில் மொத்தம் 17 கல்வி நிபுணர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் ஒருவரே ஒருவர் தான் இந்தியை போதனா மொழியாக்குவதில் பிடிவாதம் காட்டினார்.

கல்லூரி படிப்புக் காலம் முழுவதிலும் இந்தியை கட்டாய பாடமாக்க வேண்டும் என, இருவர் நீங்கலாக, மற்றவர் ஆதரித்தனர்.

ஆங்கிலம் விருப்பப் பாடமாக இருக்க வேண்டுமென நால்வரும், ஆங்கிலத்தையாவது வேறு ஐரோப்பிய அல்லது ஆசிய மொழியையாவது கட்டாய பாடமாக ஆக்கவேண்டுமென ஐவரும், கல்லூரி சட்டத்தில் மட்டுந்தான் ஆங்கிலத்தைக் கட்டாயமாக்க வேண்டுமென எழுவரும் கருத்தறிவித்தனர்.

கராச்சியில் - ஆர்ப்பாட்டம்

—o—

மொழிப் பிரச்சினையில் தகராறு

—o—

மந்திரிசபைக்கு நெருக்கடி?

கராச்சி, ஏப். 22—

பாகிஸ்தானில் உருது தவிர, வங்காளி மொழியையும் மாநில மொழியாகக் கொள்ள மத்திய முஸ்லிம் லீக் அசெம்பிளிக் கமிட்டி செய்த முடிவை ஆட்சேபித்து இங்கு உருது ஆதரவாளர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

சர்வகலாசாலை பரீட்சை எழுத வந்திருந்த மாணவர்கள் கேள்வித் தாள்களைக் கிழித்தெறிந்துவிட்டு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்ததையொட்டி கடைகள் அவசரமாக மூடப்பட்டன.

உருது பத்திரிகைகள் இன்று துக்க தினமாக கருப்புக் கோடுகளுடன் வெளிவந்தன.

வங்காளியை எதிர்த்து சில பத்திரிகைகள் தலையங்கமும் எழுதியிருந்தன.

மொழிப் பிரச்னையை இப்பொழுதுள்ள சர்க்காரால் தீர்க்க முடியாவிடில் ராஜிநாமா செய்ய வேண்டும் என ஒரு பத்திரிகை எழுதியிருந்தது.

மொழிப் பிரச்னை சம்பந்தமாக மந்திரிசபையில் நெருக்கடி மூளும் என்று சில பத்திரிகை:

(4-ம் பக்கம் பார்க்க)

காமராஜ் - அமெரிக்க கான்சல் சந்திப்பு

22-ந் தேதி காலை, சர்க்கார் காரியாலயத்தில், முதலமைச்சர் காமராஜரை, அமெரிக்க கான்சல் ஜெனரல், சந்தித்துப் பேசினார்.

★★★★★★★★★★-★★★★★★★★★★★★★

நேருவின் பதட்டத்திற்கு தி. மு. கழகம் அனுதாபம்

துணைச் செயலாளர் - நெடுஞ்செழியன் அறிவித்தார்

★

"திராவிட இயக்கத்தாரைப் பற்றித் தாங்கள் சிதம்பரத்தில் பேசிய பேச்சைப் பார்த்தேன். தாங்கள் அரசியல் நெறிமுறையையும், அரசியல் நேர்மையையும், அரசியல் கண்ணியத்தையும் இழந்திருப்பதற்காக என் இரக்கமும், அனுதாபமும் தங்களுக்கு உரியவாக."

என்று இந்தியப் பிரதமர் பண்டித நேரு, சிதம்பரம் வந்திருந்த போது, காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில், திராவிட இயக்கத்தாரைப் பற்றிப் பேசிய பேச்சைச் செய்தித் தாள்களில் பார்த்துவிட்டு, அது குறித்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இராமனுதபுர மாவட்டத் திருப்புத்தூரிலிருந்து, 19—4—54-ம் நாள், பண்டித நேருவுக்குக் கொடுத்த தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★-★★★★★★

கர்நாடக இணைப்பு மாநாட்டில் குழப்பம்

— (:) —

கர்நாடகத் தலைவர்களின் 'கார்'கள் பழுதாக்கப்பட்டது

கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பாளர் ஆர்ப்பாட்டம்

இந்துபூர், ஏப். 22—

மதகா சீரா இணைப்பு மாநாடு அமராபூர் எனும் ஊரில் மூன்று தினங்களுக்குமுன் நடைபெற்றது. எந்த முடிவும் காணுமல் மாநாடு குழப்பத்தில் முடிவுற்றது.

மாநாட்டைக் கூட்டுவதற்குப் பொறுப்பாளர்களாக இருந்த ஆந்திர சட்டசபையில் மதகா சீராவின் பிரதிநிதியாக உள்ள சித்தண்ண கௌடாவும், மகேந்திர கௌடாவும் எதிர்ப்பாளர்களால் தாக்கப்பட்டனர் எனத் தெரிகிறது. கர்நாடகத் தலைவர்களின் கார்களும் பழுதாக்கப்பட்டன எனவும் சொல்லப்படுகிறது. மாநாட்டிற்கு எதிர்ப்பான ஒலிகள் முழங்கப்பட்டும், கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

அன்று காலையில் கர்நாடக இணைப்பு மாநாடு கூடவிடாமல் தடுத்துவிட்ட ஆந்திரர்கள், மாலையில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தி, மதகா சீரா பகுதி ஆந்திர மாநிலத்துடனேயே இருக்கவேண்டுமெனவும், அப்பகுதி கர்நாடகத்துடன் சேருவதா கூடாதா என்பதைப் பிரச்சினையாக வைத்து, அப்பகுதியின் பிரதிநிதியாக ஆந்திர சட்டசபையில் உள்ள சித்தண்ண கௌடா ராஜினாமா செய்துவிட்டு, தேர்தலில் போட்டியிட வேண்டுமெனவும், இரு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 23—4—54 வெள்ளி

தலைவர் தகவல்

குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் சர்வோதய சங்கத்தில் சொற்பொழிவாற்றி இருக்கிறார். சர்வோதய இயக்கத்தின் கோட்பாடுகளைக் குறித்துப் பாராட்டி இருக்கிறார். அவைகளில் இரண்டு கோட்பாடு பற்றி அவர் கூறி இருப்பது பொதுமக்களால் கருதத்தக்கதாகும்.

ஒன்று, ஒரு அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உள்ள உறவு முறை பற்றியதாகும். மற்றொன்று, தொழில் நிர்மாணித் தலைமை பொறுத்ததாகும்.

மக்களாட்சி முறையில், ஆட்சி புரியும் அதிகாரம் முழுதும் மக்கள் கையில்தான் உள்ளது என்பது அரசியல் சித்தாந்தம். மக்கள் விரும்பினால், தங்களுக்குத் தீமை பயக்கும் ஆட்சியையும் உருவாக்கிக்கொள்ளலாம்; நலம் பேணும் நல்லாட்சியையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். பெரும்பான்மையான மக்களுக்குள்ள அரசியல் அறிவையும், விழிப்புணர்ச்சியையும் பொறுத்திருக்கிறது, அவர்கள் தங்களுக்காக உருவாக்கிக் கொள்ளும் ஆட்சியின் இலட்சணம் அமைவது!

தேர்தல் காலத்தில் பொதுமக்களின் வாக்குகளைக் கோரி நிற்கும் கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளையும், தனி நபர்களின் அரசியல் அபிலாஷைகளையும் சீர்தூக்கிப் பார்த்து நுணுகி ஆராய்ந்து அறிந்து, சிறந்தவர்களைத் தேர்ந்தெடுக்கப் பெரும்பான்மை மக்கள், அறிந்தோ அறியாமலோ தவறி விடுவார்களானால், அப்பொழுது செய்கிற தவறு, மக்களின் எதிர்காலத்தை மாசுபடுத்தியே தீரும். அதன் விளைவாக மக்கள் எண்ணம் ஈடேறாமல், இன்னல் பல ஏற்க வேண்டிய கட்டாயமும் மக்களுக்கு ஏற்பட்டு விடும்.

தேர்தல் வேளையில் பெரும்பான்மையினர் அறியாமையினால் செய்துவிட்ட தவற்றைத் திருத்தி, மீண்டும் நல்லாட்சி முறையை நிறுவ சில ஆண்டுவரை மக்கள் காத்துக் கிடக்க வேண்டும். பெரும்பாலோர் ஆதரவைப் பெற்று, ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி உள்ளவர்கள், தவறு செய்து மக்கள் நம்பிக்கையை பறிகொடுத்து வருகிற நேரத்தில், அவர்களை ஆட்சிப் பொறுப்பில் இருந்து அகற்ற, அவசரத்தில் அவர்களுக்கு ஆதரவு தந்த அதே மக்கள் முயற்சித்தாலும், வெற்றி கிட்டுவதில்லை. அதற்கான வாய்ப்பும் அரசியல் அமைப்பில் இடம் பெற்றிருப்பதில்லை. எனவே, ஒருமுறை பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்று விட்டவர்கள், செய்கிற காரியங்கள் எல்லாம், தங்களுக்குக் கேடு பயப்பதாக இருந்தாலும்கூட, அவர்களை ஆதரித்து, தங்களிடம் இயல்பாக உள்ள ஆட்சிப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்துள்ள மக்கள், சில ஆண்டுகள் வரை வாய் பொத்திக் கைகட்டிக் கிடக்க வேண்டியதாக இருக்கிறது. தன் கையொருவனை பிறர் கை கொடுத்துப் பேதைகளாகப், பொது மக்கள், சில ஆண்டுகள் வரை தவித்துக் கிடக்க வேண்டிய கட்டாயம், இன்றைய மக்களாட்சி நடைமுறையில் உள்ள மகத்தான குறைபாடு ஆகும்.

மக்களிடம் உள்ள ஆட்சிப் பொறுப்பை, ஆட்சியாளர்களிடம் குத்தகையாக விடுவதுபோல் குறிப்பிட்ட காலம் வரை காணிக்கையாகக் கொடுத்து விட்டு விழிக்கும் நிலை, இன்றைய மக்களாட்சி ஏற்பாட்டில் இருந்து வருகிறது. இன்னின்ன நற்பலனை நிறைவேற்றியாக வேண்டும் என்ற நிபந்தனை குத்தகை விடுவதின் சாரமாகும். ஆனால், காணிக்கைத் தருவது அத்தகையதாகாது. காணிக்கைக் கொடுத்தவருக்கு, ஏதாவது பிரதிபலனைச் செய்தாக வேண்டுமே என்ற கட்டாயம், காணிக்கைப் பெற்றவருக்கு அறவே கிடையாது. காணிக்கை வாங்கினவருக்கு மனமிருந்தால், காணிக்கைக் கொடுத்தவருக்கு நன்றி காட்டி நலம் செய்யலாம். இல்லையானால், கேடு செய்தாலும் கேட்கவும் காணிக்கைக் கொடுத்தவருக்கு உரிமை கிடையாது. வாங்கினவருக்கும் பதில் கூற வேண்டிய கட்டாயம் கிடையாது.

நடைமுறையில் உள்ள மக்களாட்சி ஏற்பாட்டில் பெரும்பான்மையான மக்களிடமிருந்து, காணிக்கையாகப் பெற்ற ஆட்சிப் பொறுப்பை, சில ஆண்டுகள் கழித்து மீண்டும் மக்கள் கைக்கு மாற விடாமல் நிரந்தரமாகத் தடை விதித்து விடுவதுமுண்டு. அதாவது, எந்த அமைப்பின் மூலமாக மக்களிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை தாங்கள் பெற்று பதவியில் அமர்ந்தார்களோ, அந்த மூல அமைப்பையே அடியோடு நிர்மூலமாக்கிவிடுவர் சில அதிகார வெறியர்கள். தங்களிடமிருந்து தந்திரமாகக் கவர்ந்து கொண்ட ஆட்சிப் பொறுப்பை, மீண்டும் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ள மக்கள் முந்துவரேயானால், அவர்களுக்குப் பதில் தர, ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள அதிகார வெறியர்கள், துப்பாக்கி குண்டுகளைத் தூது அனுப்புவதுமுண்டு. இந்த அலங்கோல அரசியல் கூத்தைத்தான் ஜெர்மனியில் ஹெர் ஹிட்லர் ஆடிக் காட்டினான். இதே கூத்தைத்தான் இத்தாலியிலும் சினோர் முசோலினி ஆடிக் களித்தான்.

மக்கள் விருப்பத்தைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமருபவர்களை, தவறு செய்கிற காலத்தில், உடனடியாகத் திரும்பவும் அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டால் அல்லது, வாக்காளர்களைப் பொருட்டாக மதித்து நடந்துகொள்ள வேண்டுமே என்ற கவலையும், அக்கரையும், ஆட்சி பீடத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படப்போவது கிடையவே கிடையாது. அதுவுமல்லாமல், பதவிக்காக கூடு விட்டுக் கூடு பாயும் அரசியல் கொலையும் நடைபெறாமல் தடுக்க அதுதான் வழி.

இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டும்

'பூஜா மனோபாவம்' ஜனநாயகத்தைக் கொல்லும் நஞ்சு!

எதிர்க் கட்சி உருவானாலொழிய நல்லாட்சி இல்லை

டாக்டர் அம்பேத்கார் போர் முரசு

நாகபுரி, ஏப். 21—

"காங்கிரஸ் சர்க்கார் நீண்ட நாட்களாக இருக்கிறது; இவ்வளவு காலத்துக்குப் பிறகும், ஒரு பிரச்னைக்கும் பரிகாரம் காண அதனால் முடியவில்லை. இந்த சர்க்காரை அகற்றி ஆக வேண்டியது மக்கள் கடமையாகும்,"

—என்று டாக்டர் அம்பேத்கார், தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவின்போது, திட்டவட்டமாகக் கூறினார்.

மே, முதல் கிழமை நடைபெற இருக்கும் தேர்தலில், டாக்டர் அம்பேத்கார், ரிசர்வ் ஸ்தானத்திற்குப் போட்டியிடுகிறார். தமது தேர்தல் நோக்கம் பற்றி, டாக்டர், வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் விளக்கினார்.

"காங்கிரசுடன் சமரசம் பேசிக் கொண்டு, பார்லிமென்டிலே ஒரு இடம் பிடிக்க வேண்டுமென்று நான் விரும்பினால், எளிதிலே அது சாத்தியமாகும்; ஆனால், நான் ஜனநாயகத்துக்காகவே போராடுகிறேன்.

"ஜனநாயகம் வேண்டுமா, வேண்டாமா என்று, மக்கள் முடிவு செய்ய வேண்டிய காலம் பிறந்துவிட்டது. ஜனநாயகம் வேண்டுமானால், ஒரு எதிர்க் கட்சி நிச்சயமாகத் தேவை; நாடு நாசமாகிக் கொண்டு வருகிறது; அரசியலில், சன்மார்க்க நெறியில் உள்ளது போன்ற தூய்மை இணைந்தாலொழிய, அரசியல், அயோக்கியர்களின் விளையாட்டிடம் ஆகிவிடும்.

"எதிர்க் கட்சியில் அமர்ந்துகொண்டு, பிரச்னைகளின் மறுபக்கக் கருத்தை வெளியிடவே நான், தேர்தலில் ஈடுபட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் சர்க்கார் நீண்ட நாட்களாக இருக்கிறது—இவ்வளவு காலத்துக்குப் பிறகும் ஒரு பிரச்னைக்கும் பரிகாரம் காண அதனால் முடியவில்லை; இந்த சர்க்காரை இனி அகற்றி ஆக வேண்டியது மக்கள் கடமையாகும்.

"நாடு பெரிது—நாடு முதலில்; பிறகே நேரு, காங்கிரஸ் எல்லாம், என்ற உள்ளம் கொள்ள வேண்டும். பூஜா மனோபாவம் கூடாது," என்று டாக்டர் அம்பேத்கார் விளக்கினார்.

பண்டாரா தொகுதியில் டாக்டர் தேர்தலுக்கு நிற்கிறார்.

ஆப்பிரிக்காவிலிருந்து பெட்ரோல்!

புதுவைக்கு பிரெஞ்சு ஏற்பாடு

புதுவைப் பகுதிகளுக்கு இந்தியப் பகுதியிலிருந்து பெட்ரோல் அனுப்புவதைத் தடுத்துவிட்டனர். இதைச் சமாளிப்பதற்காக, பிரெஞ்சு சர்க்கார், ஆப்பிரிக்காவிலிருந்து பெட்ரோல் தருவித்துக் கொண்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆப்பிரிக்க பெட்ரோல் வந்துசேர்ந்ததாம், இப்போது கிடைத்துள்ள பெட்ரோல் 15 நாளைக்குக் காணுமாம். மேற்கொண்டும் பெட்ரோல் வந்து சேர ஏற்பாடாகி இருக்கிறதாம்.

மலேயா இந்தியருக்குப் பாரபட்சமா?

'இல்லை' என்கிறார் உதவி மந்திரி

புதுடில்லி, ஏப். 21—

மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு வெளிநாட்டு உதவி மந்திரி பதிலளிக்கையில் மலேயாவில் ஓர் இந்தியர் தபால்—தந்தி இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும், இந்தியருக்கென்று பிரத்தியேக ஸ்தானம் எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றும், இந்தியருக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தமக்கு எவ்வித புகாரும் வரவில்லையென்றும் தெரிவித்தார்.

"கலர்ப் புடவையை கைத்தறிக்கு ஒதுக்குக!"

ஆந்திர சர்க்கார் கோரிக்கை—மத்திய சர்க்கார் நிராகரிப்பு

கலர்ப் புடவைகள் தயாரிப்பதையாவது கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்ற ஆந்திர சர்க்கார் கோரிக்கையை இந்திய சர்க்கார் நிராகரித்து விட்டதாகத் தெரிகிறது.

ஆந்திராவில் கூட்டுறவு இயக்கத்தை தீவிரப்படுத்தியும்கூட, அணி மார்க்கெட்டில் நெசவாளர்களின் வியாபா[illegible] பலப்பட்டதாகத் தெ[illegible] என மத்திய சர்[illegible]ருது கிறது.

ஆந்திராவிலுள்ள மொத்தம் 15 லட்சம் நெசவாளர்களில், 6 லட்சம் பேர் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்துள்ளனர்.

'தென்னரசு' கோரிக்கை

மலையாள காங்கிரஸ் கமிட்டி யோசனை

பதின்மர் கொண்ட குழு அமைத்தனர்

சென்னை ராஜ்யத்துடன், திருவாங்கூர்—கோச்சி சமஸ்தானங்களையும் இணைத்து, தென்னிந்திய அரசு என்ற தனி அரசு அமைக்கும் யோசனையை, மலையாள பிரதேச காங்கிரஸ் கமிட்டி வெளியிட்டிருக்கிறது.

ஏற்கனவே, இதுபோன்ற தீர்மானம், இதே கமிட்டியால் பாலக்காடில் நிறைவேற்றப்பட்டது.

இப்போது கோழிக்கோடில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்திலும் இந்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

எக்காரணம் பற்றியேனும் இது சாத்தியமில்லை என்றால், கேரள ராஜ்யம் அமைக்கலாம் என்றும் கமிட்டி கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

ராஜ்யங்கள் புனரமைப்பு கமிஷனிடம் இது விஷயமாகப் பேச, பத்து பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது,

---

பீடித் தொழில் இயந்திரமயமாகக்கூடாது

நிதி மந்திரி வற்புறுத்துகிறார்

புதுடில்லி, ஏப். 21—

பீடித் தொழில் இயந்திரமயமாக்கக் கூடாதென்றும், பிரத்தியட்ச லாபமில்லாத இது போன்ற தொழில்களில் ஆட்களுக்குப் பதில் இயந்திரங்களை உபயோகிப்பதை அனுமதிக்கக் கூடாதென்றும் மக்கள் சபையில் நிதி மந்திரி வற்புறுத்தினார்.

"இத்தொழிலில் இயந்திரங்களைப் புகுத்துவதால், வேலையின்மையை இது எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்காமல், இதற்கு முன் கையாளப்பட்ட நிலை எதிர்காலம் சம்பந்தப்பட்ட வரையில் நடைபெறாமல் பார்த்துக்கொள்வது நமது கடமையாகும்," என்று அவர் குறிப்பிட்டார்.

பிரெஞ்சிந்தியப் போர்

த. நா. கா. க. ஆதரவு

சென்னை, ஏப். 21—

"அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமென்று பிரெஞ்சிந்திய மக்கள் நடத்தி வரும் சாத்வீக போராட்டத்தைக் கண்டு மகிழ்வதுடன், அம்மக்களுக்கு இக்கமிட்டி தனது பாராட்டுதலையும் நல்லாசியையும் தெரிவித்துக் கொள்கிறது" என்றும், "மக்கள் எழுச்சியை நசுக்குவதற்கு பிரெஞ்சிந்திய சர்க்கார் எடுக்கும் பலாத்கார நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது" என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இன்று காலை கூடி பிரெஞ்சிந்திய விடுதலைப் போரை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

இலங்கையின் உத்தியோகக் கொள்கை

இந்தியாவுக்கு வாக்குறுதி

புதுடில்லி, ஏப். 21—

இலங்கையில் பொது உத்தியோகங்கள் சம்பந்தமாக அறிவிக்கப்பட்ட "இலங்கையர்" என்ற பதப் பிரயோகத்தின் புதுப் பொருள், எதிர்கால உத்தியோக நியமனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், ஏற்கனவே உத்தியோகத்திலிருந்து வருபவர்களுக்கில்லையென்றும் இலங்கை அதிகாரிகள் இந்திய சர்க்காருக்கு உறுதியளித்திருப்பதாக மக்கள் சபையில் உதவி அயல் நாட்டு மந்திரி தெரிவித்தார்.

சவூதி அரேபிய மன்னரின் சமரச முயற்சி

—— (:) ——

கி. வங்கத் தலைவர்களுக்கு அன்பழைப்பு

—— (:) ——

பஸ்லுல் ஹக் கராச்சி வருகிறார்

—— (:) ——

மன்னரின் விமானம் டாக்கா போயிருக்கிறது

—— (:) ——

மொழிப் போர்—புதுக் கட்டம்

கிழக்கு வங்கத்தில் கிளம்பிய புயல் நாளாக ஆக வலுவடைகிறது. பாகிஸ்தான் இரு கூறுகளாகிவிடுமோ என்ற அச்சம் எழத்தக்க நிலை உருவாகி இருக்கிறது.

கிழக்கு வங்கக் கிளர்ச்சியைக் கண்டு கராச்சி நிலைமையை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

வங்காளி மொழியையும் தேசிய மொழிகளில் ஒன்றாகக் கொள்ளலாம் என்ற திட்டம் லீக் சட்ட சபைக் கட்சியிலே வலியுறுத்தப்பட்டது. இதை எதிர்த்து பிரபல லீகர்கள் சிலர் கிளர்ச்சி செய்கிறார்கள். இந்த எதிர்ப்புக்கு முன்னணியில் பிரோஸ் கான் நூன், பஞ்சாப் தலைவர் இருக்கிறார்

கராச்சியில், வங்காள மொழி ஆதரவாளர்களுக்கு எதிராகக் கண்டன ஊர்வலங்கள் நடத்த ஏற்பாடாகி, 80 வயதுள்ள, மவுல்வி அப்துல் ஹக் என்பவர், இந்தக் கண்டன ஊர்வலத்தை நடத்த முன்வந்திருக்கிறார்.

எங்கும் போலீஸ் பாரா போடப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை கூடி இருக்கும் இடத்தில் பலமான போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது.

வங்காளியை தேசிய மொழியாக்குவதைக் கண்டித்து கராச்சி கார்ப்பொரேஷன் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

சவூதி அரேபியா மன்னர் இந்தப் பிரச்னைக்குச் சமரசம் காண முன்வந்திருக்கிறார்.

பாகிஸ்தானில், ஒரு மாகாணத்துக்கும், மற்ற மாகாணத்துக்கும் இடையே உருது மொழியை இணைப்பு மொழியாகக் கொள்வதை அவர் ஆதரிக்கிறார்.

கிழக்கு வங்காளம் செல்ல இருந்ததை அவர் ரத்து செய்துவிட்டார். ஆனால், கராச்சியில தங்கி இருந்து, பாகிஸ்தானில் ஒற்றுமை மலரப் பாடுபட உறுதி கொண்டிருக்கிறார்.

கிழக்கு வங்கத்திலிருந்து 30 தலைவர்களை, கராச்சிவந்து, இது சம்பந்தமாகப் பேசி சமரசம் காணும்படி அவர் அழைத்திருக்கிறார். இந்த 30 தலைவர்களையும் வங்கப் பிரதமர் பஸ்லுல் ஹக் அவர்களே தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சவூதி அரேபிய மன்னர், இபின் சவுத் அவர்களைக் கண்டு பேச, பஸ்லுல் ஹக்கும், கராச்சி வருகிறார்.

டாக்கா சென்று தலைவர்களை கராச்சி அழைத்துவர, மன்னரின் தனி விமானம் சென்றிருக்கிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையின், கிழக்கு வங்க உறுப்பினர்களும் சமரசப் பேச்சில் கலந்து கொள்வர்.

இந்திய விஞ்ஞானி தற்கொலை

லட்சுமணபுரி, ஏப் 22—

65 வயதுள்ள டாக்டர் கே. என். பால் என்ற பிரபல விஞ்ஞானி இங்கு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது

நாட்டின் முன்னணிக்கு ஏழை மக்களுக்கும் வரி!

'சமாதானம்' கூறுகிறார் நிதி மந்திரி

புதுடில்லி, ஏப். 21—

"இந்தியா போன்ற நாட்டில், பொது உபயோகப் பண்டங்கள் மீது அதிக வரி போடாமல், நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவையான பணத்தைத் திரட்ட முடியாது; இந்தியா ஏழை நாடு; எனவே நாட்டின் அபிவிருத்திக்கான செலவின் சுமை ஏழைகள் மீதும் விழுவது சகஜந்தான்; இந்தியாவின் முன்னேற்ற அணியில் தானும் ஓர் கூட்டாளி என்கிற உண்மையை ஏழையும் உணர வேண்டியதுதான்,"

—என்று, புது வரி விதிப்புகளை அங்கீகரிக்கும் மசோதா மீது மக்கள் சபையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில், நிதி மந்திரி தேஷ்முக் குறிப்பிட்டார்.

வரிப் பிரரேபனையை அவர் குறிப்பிடுகையில், அவை, சாதாரண குடும்பத்தின் வரவு-செலவுகளைப் பாதிக்காதென்றும், அப்படி பாதிப்பதாயினும் குறைந்த அளவிலேயே அவை இருக்குமென்றும் கூறினர்.

"புதிய கல்வித் திட்டம் நீடிக்கக்கூடாது!"

ஆசிரியர் சம்மேளன செயலாளர் வேண்டுகோள்

சென்னை, ஏப் 19—

ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் சம்மேளன செயலாளர் வி ராமுண்ணி பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறார்:—

ஆச்சாரியாரால் அழைக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்குவதுதான் காமராசர் மந்திரி சபையின் முதல் வேலையாக இருக்கும் என்று இந்த நாட்டின் கல்வியில் அக்கரையுள்ள ஆசிரியர்களும், மற்றவர்களும் நம்பியிருந்தார்கள்; ஆனால், இதைப் பற்றி காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் முதல் கூட்டத்தில் இந்தக் கல்வித் திட்டத்தை விவாதித்ததாக கட்சிக்குள்ளேயே இதற்கு எதிர்ப்பு இருந்ததாகவும், இதைப்பற்றி யாதொரு முடிவும் செய்யவில்லையென்றும் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன.

ஏற்கனவே இதனால் சில ஆசிரியர்களுக்கு வேலை போயிருக்கிறது; சிலருக்கு வெளியேற முன்னறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. இதை வாபஸ் வாங்குவதற்கு மந்திரி சபை முடிவுக்கு வராவிட்டால் நம் நாட்டின் பிற்கால சந்ததிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

இதற்கு முன்னிருந்த மந்திரி சபை செய்துள்ள ஏற்பாட்டின்படி இது அடுத்த பள்ளிக்கூட ஆண்டில் நகரங்களிலுள்ள பள்ளிகளுக்கும் பரவிவிடும்; அவ்வாறு பரவுமுன் இதைத் தடுத்திட வேண்டும்.

இந்தக் கல்வித் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அதிக பொறுப்புண்டு; ஆகையால், ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் [illegible]பனங்கள், தங்களுக்கு [illegible] திட்டத்தால் வரும் [illegible]மை பற்றியும், மாணவர்களுக்கு உண்டாகும் கெடுதிகள் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றி முதல மந்திரிக்கு வேண்டுகோளாக அனுப்ப வேண்டுமோறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம் ஒழியும்வரை பொதுமக்களும் தங்களுடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கூடலில் 144 தடை உத்திரவு நீடிப்பு

பொது மைதானப் பெயரிடல் தகராறின் எதிரொலி

முக்கூடல், ஏப். 20—

இவ்வூர் காங்கிரஸ்காரர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கும் போஸ் சவுக்கம், "பாண்டியனூர் திடல்" எனப் பெயர்களின் தகராறு காரணமாக 5-4-54-ல், அம்பை தாசில்தார் அவர்கள் நேரில் வந்து இடத்தை பார்வையிட்டு சமாதானப்படுத்த முயற்சித்தும் பயனில்லாமல் போய்விட்டது.

9—4—54-ல், வாய்தா போட்டு, திரும்பவும், இரு கட்சிக்காரர்களும் குறிப்பிட்ட பொது மைதானத்தில், பொதுக் கூட்டம் போடக் கூடாதென்று 19—4—54-லிருந்து 19—6—54 2 மாதங்களுக்குப் தடையுத்திரவை தோழர்கள் முத்துக்குட்டி, நாகராஜன் ஆகியோரிடம் தரப்பட்டது.

* * *

பஞ்சாயத்து போர்டு முடிவு

முக்கூடல், ஏப். 21—

இவ்வூரில் உள்ள பொதுவான ஒரு மைதானத்திற்கு 'போஸ் சவுக்கம்,' 'பாண்டியனூர் திடல்' என்ற பெயர்களை வைப்பதில் சுமார் 3 மாத காலமாக காங்கிரஸ் கமிட்டியாருக்கும், தி. மு. கழகத்தினருக்கும் தகராறு இருந்துகொண்டு வருகிறது.

இதன் காரணமாக ஊரில் 144 தடை உத்திரவும் பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியமும் வந்துவிட்டது.

இதன் முடிவை பஞ்சாயத்து போர்டு தீர்ப்புக்கு விட்டபோது, அவர்கள் அதை ஒத்தி வைத்து விட்டார்கள்.

பின்னர், காங்கிரஸ் காரர்களின் சில முயற்சிகள் தோல்வியுற்ற பின், போர்டு தலைவர் முயற்சியால் ஓர் அவசரக் கூட்டம் இதுபற்றி முடிவு செய்ய தலைவர் வி. எஸ். சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது, ஊர் பொது இடமாகிய மைதானத்திற்கு போஸ் சவுக்கம், பாண்டியனூர் திடல் என்று வைப்பது விஷயமாக ஓர் முடிவு செய்யவேண்டும் என்று தலைவர் கூறினார்.

இந்த விஷயம் மாஜிஸ்திரேட் வரையில் சென்ற பின்பு, இனி நாம் இதில் தலையிடக் கூடாது என்று உப தலைவர் எம். எஸ். ராஜாங்கம் கூறினார்.

இந்தப் பிரச்னைப் பற்றி, ஓட்டர் பட்டியலில் உள்ளபடி, யார் அதிக கையெழுத்து வாங்குகிறார்களோ, அவர்கள் விரும்பிய பெயர் வைப்பது என சில மெம்பர்கள் கருத்தறிவித்தனர்.

அவ்வாறு செய்வதாலும், இரு கட்சிகளுக்கும் தகராறு ஏற்படும் என்று சில மெம்பர்கள் கூறினர்.

கடைசியில், 'இப்பிரச்னையில், பஞ்சாயத்து போர்டு தலையிடுவதா வேண்டாமா?' என்று ஓட்டெடுப்பதென முடிவுக்கு வந்து, ஓட்டுக்கு விட்டதில் 'தலையிட வேண்டாம்' என்ற தீர்மானத்திற்கு 6 ஓட்டுகளும், 'தலையிட வேண்டும்' என்ற தீர்மானத்திற்கு 4 ஓட்டுகளும் கிடைத்தது.

தி. மு. கழகத்தினர் நினைத்தபடி 'தலையிட வேண்டாம்' என்ற தீர்மானத்திற்கு 2 ஓட்டுகள் அதிகமாகக் கிடைத்தது.

சென்னை சர்க்கார் கடன் வாங்குமா?

மத்திய சர்க்கார் உத்திரவு

பொது மக்களிடமிருந்து 5 கோடி ரூபாய் கடன் திரட்டுவது சம்பந்தமாக சென்னை சர்க்கார் கேட்டிருந்த குறிப்புக்கு மத்திய சர்க்கார் பதிலனுப்பிவிட்டனர்.

மத்திய அரசாங்கத்தின் தேசியத் திட்டக் கடன் நாடு முழுமைக்கும் ஏற்பட்டதென்றும், அதில் கிடைக்கும் தொகையிலிருந்து, மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்க முடியுமென்றும் அப்பதில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மத்திய சர்க்காரின் இந்த பதிலின் தொனிப்பு, 'சென்னை அரசாங்கம் கடன் திரட்ட வேண்டியதில்லை' என்பதையே குறிப்பதுடன் அதற்கு அனுமதியும் கிடையாது என்று சுட்டிக்காட்டுகிறது.

நன்கொடை அளிக்க இயலாதாம்!

"திருப்பதியில் ஆந்திர சர்க்கார் ஏற்படுத்த உத்தேசித்துள்ள சர்வ கலாசாலைக்கு 1000 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளிக்க இயலாது; ஸ்தாபன நலனுக்கேற்ப இருந்தாலொழிய ஸ்தாவர சொத்துக்களை குத்தகைக்குக் கூட கொடுக்க முடியாது! சர்வ கலாசாலைக்கு ரூ. 6½ லட்சம் நன்கொடைகொடுப்பதாக ஒருபொழுதும் போர்டு தெரிவிக்கவில்லை" — இவ்வாறு, திருப்பதி தேவஸ்தான டிரஸ்டு போர்டு கூட்டம் நடைபெற்றபோது அறிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சி பணிந்தது!

கராச்சி, ஏப் 22—

கி வங்கத்தில் சிட்டகாங்கில் உப்பு போக்குவரத்து மீது விதிக்கப்பட்ட தடையை உடனடியாக நீக்குமாறு பிரதமர் முகமதலி கட்டளையிட்டிருப்பதுடன், தகவலைத் தந்தி மூலம் கி. வங்க முதல் மந்திரிக்கு அறிவித்துவிட்டார்.

முக்கூடல் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

முக்கூடல் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் 16—4—54 இரவு 8 மணிக்கு கழக மனையில் தோழர் ச. தங்கையா தலைமையில் நடைபெற்றது; அதுபோது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர். மா. ச முத்துக்குட்டி; செயலாளர்: பூ காசி தேவராஜ்; துணை செயலாளர்: மு செந்திவேல்; பொருளாளர்: மு வேலுசாமி; மாவட்டப் பிரதிநிதி: க. அ. அப்பாத்துரை; விளம்பர உறுப்பினர்: க. சண்முகவேல்; மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக 12 பேரும், அதுசமயம் பொறுப்பாளராக [illegible]

★★★

சேலம் மாவட்ட தி.மு.க. மாநாடுகள்

சேலம் V. மார்க்கெட்டில் அமைந்துள்ள பரசுராமன் பந்தலில் — வள்ளியப்பன் அரங்கில் நடைபெறும்.

மே 1: சனிக்கிழமை	மே 2: ஞாயிற்றுக்கிழமை
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: தோழர் ப. உ. சண்முகம்	தலைவர்: தோழர் இரெ. இளம்வழுதி, M.A., B.L.
துவக்குபவர்: தோழர் கோகுல கிருஷ்ணன், B.A., B.L.	துவக்குபவர்: மதுரை தோழர் எஸ். முத்து

மற்றும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வார்கள்

★

இரு நாட்களிலும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'காதல் ஜோதி,' 'ஓர் இரவு' நாடகங்கள் நடைபெறும்

கட்டணம்:—வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி: ரூ. 3; ஆதரவாளர்: ரூ. 2; பார்வையாளர்: ரூ. 1; பெண்கள்: அணா 8.

—வரவேற்புக் குழுவினர்.

★★★

இமாலயமேறும் ஜப்பானிய முயற்சிக்கு எதிர்ப்பு!

கடவுள் சீற்றங் கொண்டிருப்பதாக திபேத் பூசாரிகள் ஆத்திரம்

பஞ்சம், பிணி, சாக்காடு விளைவாயிற்று என குற்றச்சாட்டல்

டோகியோ, ஏப். 21—

ஜப்பானிய இமாலயக் குழுவினர், இமயத்தில் 26,658 அடி உயரமுள்ள மானசுலு மலைச் சிகரத்தின்மீது ஏற முயற்சித்ததை, மத வெறி மிகுந்த திபேத்திய லாமா பூசாரிகளும், அவரைச் சார்ந்தவர்களும் தடுத்து நிறுத்திவிட்டனர் என்று இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

தெய்வ பக்தியற்ற ஜப்பானியர்கள் மானசுலு சிகரத்தின்மீது ஏற முயற்சித்ததால், சென்ற 3 ஆண்டுகளாக விளைச்சல் தவறி விட்டதாகவும், விஷக் காய்ச்சல் போன்ற பெரும் வியாதிகள் பரவி வருவதாகவும் கூறி கோபமடைந்த கிராமவாசிகள் மேற்படி சிகரத்தை ஏற முயற்சித்து வரும் ஜப்பானிய கோஷ்டியை சமக் என்னுமிடத்தில் தடுத்து நிறுத்திவிட்டனர்.

சமக் என்பது சிகரத்தின் அடிவாரத்திற்கருகில் சாமா என்ற இடத்திலுள்ள ஒரு கிராமம்.

மலையேறும் கோஷ்டி மார்ச் 30-ம் தேதி காட்மாண்டுவை விட்டு மானஸ்லு சிகரத்தின் அடிவாரத்தை அடைந்ததும் கிராமவாசிகள் கோபமடைந்து உணவுப் பண்டங்களை விற்கவும் மறுத்துவிட்டனர்.

காரணம் கேட்டதற்கு தெய்வ பக்தியில்லாத ஜப்பானியர்களை சிகரத்தின் மீது ஏற அனுமதித்ததால் அநேக கஷ்டங்கள் ஏற்பட்டதாகவும், மறுபடியும் ஏற அனுமதித்தால் தெய்வ தண்டனை கிடைக்குமென்றும் கூறினார்கள்.

சென்ற மூன்று வருடங்களில் அப்பகுதியில் பஞ்சம் ஏற்பட்டதற்கும், டைபாய்டு போன்ற பெரும் வியாதிகளால் அநேகர் இறந்ததற்கும், புராதன கோவில் ஒன்று இடிந்து விழுந்து 3 பெண் சந்நியாசினிகள் இறந்ததற்கும் ஜப்பானியர்களே காரணமென்றனர்.

ஜப்பானியர்கள், மலை மீது கட்டாயமாக ஏற முயற்சித்தால் செர்பாக்கள் உட்பட கோஷ்டியிலுள்ள எல்லோரும் கொல்லப்படுவார்களென கிராமவாசிகள் எச்சரித்தனர்.

கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர், சாமா கிராமத்தைச் சேர்ந்த வயோதிக குரு ஒருவரை அணுகியபோது, கஷ்டங்கள் எல்லாவற்றிற்கும் ஜப்பானியர்களே காரணமென கோபமாகப் பேசினார்.

ஆகையால், மலையேறும் கோஷ்டிகள் சமக் சமவெளிக்கே திரும்பிவிட்டனர்.

ஜப்பானியக் கோஷ்டி அந்த கிராமத்தின் வழியாகச் செல்ல முடியாவிட்டால் மலையேறும் முயற்சியையே கைவிட வேண்டியதுதான்.

இந்த தகவல் கிடைத்தவுடன் ஜப்பான் இமாலய மலையேறும் கோஷ்டியின் பிரதமர் எம். பி. கொய்ராலாவுக்கும், உள்நாட்டு மந்திரி ... ராவுக்கும் இது சம்பந்தமாக உதவி கோரி தந்தி அனுப்பியிருக்கிறார். அவர்களிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை.

மதுவிலக்கு சட்டப் பிரிவுகள் வழக்கு

தீர்ப்பு ஒத்திவைப்பு

சென்னை, ஏப். 22—

சென்னை மதுவிலக்கு சட்டத்தில் சில பிரிவுகள் செல்லுபடியாகாதென்றும், சில சட்டத்திற்கு முரணானவை என்றும் ஆட்சேபித்து நடைபெற்ற வழக்கில் தீர்ப்புக் கூறுவதை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கான்ஸ்டேபிள் தற்கொலை

மற்றொரு கான்ஸ்டேபிளுடைய சட்டையைத் திருடிக் கொண்டதாகச் சொல்லப்பட்ட புகார் கேட்டு மனம் தாளாமல், ராமசாமி என்ற ரிசர்வ் கான்ஸ்டேபிள், மைலாப்பூரில், துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு மாண்டு போனார். சட்டை, தவறி, இவரிடம் உடை வெளுப்போனால் தரப்பட்டதாம்.

லால்குண்டா தீ விபத்து

உதவித் திட்டம்

வட சென்னையில், ஏற்பட்ட லால்குண்டா தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்ய மேயரின் நிவாரண நிதியிலிருந்து பணம் உதவ, உதவி மேயர் தோழர் டி. வேணுகோபால் கமிஷனருடன் கலந்தாலோசித்தார். பணமாகத் தருவதைவிட சாமான்களாக வாங்கி குடும்பத் தலைவர்களிடம் தருவது பலனளிக்கும் என்று உதவி மேயர் கூறினார்.

இந்த தீ விபத்தில் 100 குடிசைகள் சாம்பலாகிவிட்டன—500 பேர் வீடின்றி வேதனைப் படுகின்றனர்.

கராச்சியில் ஆர்ப்பாட்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் தெரிவித்திருக்கின்றன.

வங்காளிக்கு, அரசாங்க மொழி அந்தஸ்து அளிப்பதை எதிர்த்து பாகிஸ்தான் மத்திய சர்க்காரின் சில மந்திரிகளும் அ. தி. சபையைச் சேர்ந்த சில வங்க மெம்பர்களும் ராஜினாமா செய்துவிடுவதாக பயமுறுத்தியிருக்கின்றனராம்.

உருதுவை மட்டுமே அரசாங்க மொழியாக்க வேண்டுமென கோஷித்த சுமார் 5000 பேர் பாக் பார்லிமெண்ட் கட்டிடத்தின்எதிரில் ஆர்ப்பாட்டம் செய்தனர். பிரதம மந்திரி முகமது அலி அவர்கள் முன்பேச முயற்சித்தபோது, திரும்பிப் போகும்படி முழக்கமிட்டு அவரைப் பேசவிடாமல் செய்து விட்டனர்

சேமிப்பு தொகை அதிகரிப்பு

1953—54-ல், தபாலாபீசுகளின் சேமிப்புப் பகுதிகளில் செலுத்தப்பட்ட டிபாசிட்டுகளின் மொத்தத் தொகை சுமார் ரூ 111·55 கோடி. 1952—53-ல் டிபாசிட்டுகள் மொத்தம் ரூ 109 கோடி.

ரயில்வேக்களில் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

புதுடில்லி, ஏப். 22—

இந்திய சர்க்கார் விசேஷ போலீசு ஸ்தாபனம், ரயில்வேக்களில் எடுத்துவரும் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாக 1954 மார்ச் மாதத்துடன் முடிந்த கால் ஆண்டில் மொத்தம் 10 வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனைகளும், அபராதங்களும் விதிக்கப்பட்டன.

கழகக் கூட்டங்கள்

★

திட்டக்குடி

தி. மா. மு. கழக 2-வது ஆண்டு விழா

24—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: வானொலித் திடல்

பேசுவோர்;

ஈ வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

மாதவரம்

25—4—54 மாலை 5½ மணிக்கு

இடம்: மாதவரம் மக்கு துரைத் தோட்டம், கணக்கன் சத்திரம்

தலைவர்: மா. இரா. இளங்கோ

பேசுவோர்:

மு கருணாநிதி
எஸ். எஸ். தென்னரசு
அ. ஜெயராஜ்
மா. போ. வேதாச்சலம்
கோ. இராஜஜெயகரன்

★

சென்னிமலை

தி.மு. கழக ஆண்டு விழா

25—4—54 மாலை 4 மணிக்கு

தலைவர்: எஸ். அப்பாவு

பேசுவோர்:

ஈ வெ. கி. சம்பத்
கி. மனோகரன்
அருண்மொழி

அன்றிரவு 10 மணிக்கு 'சமுதாய பலி' என்னும் நாடகம் நடைபெறும். நாடகத்திற்கு கட்டணம் உண்டு.

★

சல்லிபட்டி

25—4—54 ஞாயிறு மாலை

இடம்: முத்தாலம்மன் திடல்

தலைவர்: இராமசாமி

பேசுபவர்:

எம். ஆர். கணேசன்

★

சோழதரம்-புடையூர்

முதலாவது ஆண்டு நிறைவு விழா

26—4—54 மாலை 5 மணிக்கு

இடம்: சோழதரம் குறுக்கு ரோட்டுக்கு அருகில்

தலைவர்: சி. முனுசாமி

பேசுவோர்:

புது எக. தாமோதரன்
மா. பொன்னம்பலம்
லா. ந. ராமலிங்கம்

விடுதலை வீரர்களுக்கு விநோதமான சோதனை!

சைகோன், ஏப் 22—

இந்தோ-சீனாவில், டியன் பியன் பூவில் செயற்கை மழை பெய்வித்து, பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் வியட்மின்களுக்கு சப்ளை கிடைக்காமல் செய்ய பிரெஞ்சு அதிகாரிகள் திட்டம் போட்டிருக்கின்றனர்.

நல்லதோர் பணி!

மணிமேகலை, சிலப்பதிகாரம் தெலுங்கில் அச்சிடப்படும்

திருப்பதி, ஏப் 22—

சீ. ராமுலு ரெட்டியார் என்பவர் தெலுங்கில் மொழிபெயர்த்த மணிமேகலை, சிலப்பதிகாரம் நூல்களை, தெலுங்கில் அச்சிட திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தார் தீர்மானித்துள்ளனர். அன்றியும், திருவேங்கடவன் கீழ்நாட்டு மொழிக் கல்லூரியில், தமிழ்ப் பண்டிதர் வகுப்புகள் ஆரம்பிக்கவும் முடிவு செய்துள்ளனர்.

அயன்புரம் தி. மு. கழக செயற் குழு தேர்தல்

25—4—54 ஞாயிறு காலை 9 மணிக்கு, 21-வது வட்ட தி. மு. கழக கிளையின் செயற் குழு தேர்தல் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். இடம்: 47, மேட்டு தெரு.

உலிபுரம் தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

"25—4—54 ஞாயிறு இரவு 8 மணிக்குமேல், கழகக் கட்டிடத்தில், சேலம் மாவட்ட மாநாட்டைப் பற்றிய செய்திகள் பேசவேண்டியபடியால், எல்லா அங்கத்தினர்களும் தவறாமல் வரவேண்டுமாய் வேண்டப்படுகிறது," என, தோழர் உ. செ. ராமசாமி அறிவிக்கிறார்.

23-வது வட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கட்கு

"25-4-54 காலை 10 மணிக்கு எம். வேதாசலம் பணிமனையில் (புரசை) பொது உறுப்பினர் கூட்டம் கூடும். பொது உறுப்பினர்யாவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்" என, செயலாளர் ஜே. என் மணி அறிவிக்கிறார்.

திருப்பூர் இளைஞர் நடிகர் மன்றம் செயற் குழு கூட்டம்

25—4—54 மாலை 5 மணியளவில், சபாபதிபுரம் பி. ... எம். சி. அவர்கள் ...யில், தோழர் கே. பி. செல்வன், எம். சி. தலைமையில் நடைபெறும்.

பெற்றோர்கள் தினம்

24—4—54 மாலை 5 மணிக்கு புது வண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர் ஐரோட்டிலுள்ள கார்ப்பொரேஷன் உயர்தர ஆரம்பப் பள்ளி பெற்றோர்கள் சங்கச் சார்பில் 'பெற்றோர்கள் தினம்' மேற்படி பள்ளியில், தோழியர் பி. வி. தாரா செரியன், எம். சி. தலைமையில் கொண்டாடப்படும். தோழியர் கமலா தேவி, எம். சி பரிசுகள் வழங்குவார்.

நகர இளைஞர் கழகம்

24—4—54 மாலை 6 மணிக்கு, ரூலா, மாணிக்கச் செட்டி தெரு, மேற்படி கழகக் கட்டிடத்தில் தோழர் அ. கி. பரந்தாமனார் அவர்கள், 'தமிழ் அரசியல் மொழி' என்பது பற்றி பேசுவார்.

தொழிலாளர்கள் மீது தடியடிப் பிரயோகம்

40 பேர் கைது

கான்பூர், ஏப். 22—

தடை உத்திரவை மீறி நகரில் பல்வேறு பகுதிகளில் ஊர்வலங்கள் நடத்திய மில் தொழிலாளர்கள் மீது போலீசார் நான்கு தடவை தடியடிப் பிரயோகம் செய்தனர். கூட்டத்தினர் கட்டு மீறிப்போய்விட்டதால் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று; 12 பேர் காயமடைந்தனர்.

கூட்டத்தினர், சில இடங்களில் காங்கிரஸ் கொடிகளைக் கிழித்ததாகவும், தெரு விளக்குகளை உடைத்தனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது

தடையை மீறியதற்காகவும், இதர குற்றங்களுக்காகவும் இதுவரை 40 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சென்னை சட்டசபை

மே 5-ந் தேதி கூடும் சென்னை சட்டசபை, தொடர்ந்து 10-நாட்கள் நடைபெறும் என்று தெரிகிறது.

குறுக்கெழுத்துப் போட்டி

'சூதாட்டமல்ல' என்று உயர்நீதி மன்ற தீர்ப்பு

பம்பாய், ஏப். 22—

"பம்பாய் மாநிலத்திற்கு வெளியிலுள்ள பத்திரிகைகளில் வெளியாகும் குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்த பம்பாய் சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது; இவ்வளவு தொகை வரியாகச் செலுத்த வேண்டுமென்று மொத்தமாக விதிப்பது அரசியலமைப்புச் சட்டம் 16-வது விதிக்கு முரணானது,"

என்று, போட்டிப் பந்தயக் கட்டுப்பாடுகள், வரி விதிப்புச் சட்டம் ஆகியவற்றின் மீது பம்பாய் சர்க்கார் விதித்துள்ள உத்தரவை ஆட்சேபித்து செய்திருந்த வழக்கின் மீது தீர்ப்பளிக்கையில், பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

"குறுக்கெழுத்துப் பரிசுப் போட்டியை 'லாட்டரி'யாகக் கருத முடியாது; பத்திரிகைகள் குறுக்கெழுத்துப் போட்டி நடத்துவதை ஆதரிப்பவர்களும் உண்டு; கடுமையாக எதிர்ப்பவர்களும் உண்டு; அதை ஒரு சிலர் பொழுதுபோக்கு என்று கருதுகிறார்கள்; மற்றும் சிலர் சூதாட்டம் என்கிறார்கள்; இந்த விஷயத்தில் தணிக்கை செய்யும் வேலையை கோர்ட் ஏற்கமுடியாது; ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குள் பரிசுப் போட்டிகள் நுழைவதை ஏதோ ஒருவகையில் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்தான்; இதற்காக, மக்கள் சபை, நாடு முழுவதற்கும் செல்லத்தக்க ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும்," என்று, தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது.

புதுக்கோட்டை தீப்பெட்டி தொழிற்சாலையில் தீ விபத்து

அமர்ஜோதி தீப்பெட்டி தொழிற்சாலை விற்பனை டிப்போவில் நடுநிசியில் ஏற்பட்ட தீ விபத்தின் ஓசையில் ஊரே அதிர்ந்துவிட்டது. தொழிற்சாலை ஸ்டோரில் ஒரு பாகமும், ஏராளமான தீக்குச்சிகளும் தீக்கிரையாயின தீயணைக்கும் படையினர் விரைந்துவந்து தீயை அணைத்தனர் சுமார் ரூ 7500க்கு சேதம் இருக்குமென நம்பப்படுகிறது.

விஜயலட்சுமிக்குப் பைத்தியம்?

கணவனை சுட்டுக்கொன்ற மனைவியின் நிலைமை?

திருச்சியில் போலீஸ்—இன்ஸ்பெக்டரான தன்னுடைய கணவனையும், டிரைவரையும் சுட்டுக் கொன்றதாகக் கைது செய்யப்பட்டுள்ள விஜயலட்சுமிக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக சென்னை பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரி படிப்பு வாசித்துள்ள விஜயலட்சுமி, என்ன செய்கிறோமென்ற புத்தியின்வாதீனமில்லாத நிலையில், கணவனைச் சுட்டுவிட்டதாகவும், அதனால், விஜயலட்சுமியை விடுதலை செய்யவேண்டுமென்றும், அவருடைய சகோதரர் மனுசெய்து கொண்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,